இலவசபிரசுரம்: 11

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



அப்பர் சுவாமிகள்

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய

# திருமறைக் காட்டு திருக்கோயில் திருமறைக்கதவம் திறக்கப் பாடிய பதிகம் — திருமுறை 5

## மஹா சிவராத்திரி வெளியீடு

## 22-2-1982

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமட அதிபர்

ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

அவர்களால்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தில்

வெளியிடப்பெற்றது.

★

பதிப்பாளர்: சி. கிருஷ்ணமூர்த்தி,

திருமுறை மன்றம், யாழ்ப்பாணம். (இலங்கை)

உ

சிவமயம்

# பதிப்பாளரின் பணிவுரை

உலகிலே தோன்றிய உயிர்கள் யாவும் துன்பம் நீங்கிப் பேரின்பம் பெற விரும்புதல் இயற்கை. பெறுதற்கரிய இம் மானிடப் பிறவியை எடுத்த நாம் பேரின்பப் பேற்றைப் பெறத் திருமுறைகளைப் பண்ணுடன் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதல்வேண்டும்; சிந்தித்தல் வேண்டும். அதற்காகவே எமது நாயன்மார்கள் திருமுறைச் செல்வங்களைத் தந்துவிட்டுச் சென்றுள்ளார்கள்.

அன்று வாகீசரும் ஞானசம்பந்தரும் திருவீழிமிழலைக்குத் தல யாத்திரை மேற்கொண்டபோது அங்கு மாரிவளங் குன்றிப் பஞ்சமேற்பட அடியார்கள் யாவரும் பசிப்பிணியால் வருந்தினர். அப்பொழுது வாகீசரும் ஞானசம்பந்தரும் எம்பெருமானைத் தொழுது திருமுறைகளைப் பாடிப் படிக்காசு பெற்று அடியார்களுக்கு அமுது செய்வித்தனர்.

அதனை அடுத்து அவர்கள் மறைக்காட்டுறை மணாளனை வணங்குவதற்காக மறைக்காடு சென்றார்கள். அங்கு வேதங்களால் அடைக்கப்பட்டிருந்த திருக்கதவினைத் திருநாவுக்கரசு

சுவாமிகள் இப்பதிகத்தினைப்பாடித் திறக்கவும், ஞானசம்பந்தர் 'சதுரம் மறை' என்ற பதிகம்பாடி மூடவும் செய்தார்கள். அன்றுமுதல் அக்கதவு வழக்கம்போல் திறக்கவும் மூடவும் முடிந்தது.

எனவே இப்பதிகத்தினைக் கும்பாபிஷேகத் தினத்தில் பதினொரு பாடலும் பாடியே திருக்கதவினைத் திறக்க வேண்டுமென்பது திருமுறையின் வழக்கம்.

இப்பதிகத்தினை யாழ் திருமுறை மன்றத்தினராகிய நாம் மஹா சிவராத்திரி தினமாகிய இன்று, திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தில் ஸ்ரீகாசி மட அதிபர், ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமி தம்பிரான்சுவாமிகள் அவர்களால் வெளியிடுவது சாலச் சிறந்ததாகும். ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகளின் பொன்னார் திருவடிகளைப் பிரார்த்தித்துச் சமர்ப்பிக்கின்றோம்.

சி. கிருஷ்ணமூர்த்தி
(அமைப்பாளர்)

திருமுறை மன்றம்,
31/12, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்
22-2-1982.

உ

சிவமயம்

# திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய

## திருமறைக் காட்டுப் பதிகம் திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னூர்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 1

ஈண்டு செஞ்சடை யாகத்துள் ஈசரோ
மூண்ட கார்முகி லின்முறிக் கண்டரோ
ஆண்டு கொண்டநீ ரேயருள் செய்திடும்
நீண்ட மாக்கத வின்வலி நீக்குமே. 2

அட்ட மூர்த்திய தாகிய அப்பரோ
துட்டர் வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
பட்டங் கட்டிய சென்னிப் பரமரோ
சட்ட விக்கத வந்திறப் பிம்மினே. 3

அரிய நான்மறை யோதிய நாவரோ
பெரிய வான்புரஞ் சுட்ட சுவண்டரோ
விரிகொள் கோவண ஆடை விருத்தரோ
பெரிய வான்கத வம்பிரி விக்கவே. 4

மலையி னீடிருக் கும்மறைக் காடரோ
கலைகள் வந்திறஞ் சுங்கழ லேத்தரோ
விலையின் மாமணி வண்ண உருவரோ
தொலைவி லாக்கத வந்துணை நீக்குமோ. 5

பூக்குந் தாழை புறணி யருகெலாம்
ஆக்குந் தண்பொழில் சூழ்மறைக் காடரோ
ஆர்க்குங் காண்பரி யீரடி கேளுமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே. 6

வெந்த வெண்பொடிப் பூசும் விகிர்தரோ
அந்த மில்லி அணிமறைக் காடரோ
எந்தை நீயடி யார்வந் திறைஞ்சிட
இந்த மாக்கத வம்பிணி நீக்குமே. 7

ஆறு சூடும் அணிமறைக் காடரோ
கூறு மாதுமைக் கீந்த குழகரோ
ஏற தேறிய எம்பெரு மானிந்த
மாறி லாக்கத வம்வலி நீக்குமே. 8

சுண்ண வெண்பொடிப் பூசுஞ் சுவண்டரோ
பண்ணி யேறுகந் தேறும் பரமரோ
அண்ண லாதி அணிமறைக் காடரோ
திண்ண மாக்கத வந்திறப் பிம்மினே. 9

விண்ணு ளார்விரும் பியெதிர் கொள்ளவே
மண்ணு ளார்வணங் கும்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே. 10

அரக்க னைவிர லாலடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீ ரெம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க இக்கத வந்திறப் பிம்மினே. 11

திருச்சிற்றம்பலம்

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்—4668/2-82